முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1663

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.04.2024**, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அறம் காத்து வருகின்ற தேசிகா
மாறுதலை செய்வேன் இந்த கலியிலென
மாதவசியாய் வந்தருள்புரிகின்ற குருராஜா
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(குரோதி வருடம் சித்திரை மாதம் 05 ம் நாள், 18.04.2024, வியாழக்கிழமை)
வரமாக நீ உலகோர்க்கு
வழங்கி வருகின்ற தீட்சை எல்லாம்
3. தீட்சையெல்லாம் ஆறுமுகன் யான் தருகின்ற திடமாகும்
தீட்சைவழி அரங்கன் நீ தரும் உபதேசமெல்லாம்
மாட்சிமை பொருந்திய ஆறுமுகன் என் சொல்லாகும்
மக்களெல்லாம் அதை வேதமாய் ஏற்று மண்ணுலகில் ஞானம் பயின்றுவர
4. வருகின்ற மக்கள் அனைவருக்கும்
வல்லமைபட ஆறுமுகன் யான் துணை நிற்பேன்
தருகின்ற குணம் கொண்ட உன் தர்மசாலைகள் கிளைகள் அத்துனையிலும்
தண்டாயுதன் யான் இறங்கி அரங்கன் உந்தனுக்காய் அருள் புரிவேன்
5. அருளவே தர்மம் வளரவளர
அரங்கன் கொள்கைகளும் மலரும்
மலருகின்ற அரங்கன் கொள்கை வழியும் தர்மத்தின் வழியும்
மக்களிடை யான் சக்தியாக மாறி இறங்கி
6. இறங்கியே இந்த உலகத்தில் ஞானவான்களும் தர்மவான்களும்
இணையில்லாத சக்தி மிக்கவர்களாய் உருவாக்கி
உருவாக்கி உலகத்தில் மாற்றத்தை
உத்தமமாய் ஞான யுகமாற்றமாக

7. குரு அரங்கன் பேரிலே குவலயத்தில்
தர்ம ஞான ஆட்சி காலமாகவும்
அற்புதம் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–